முருகப்பெருமான் துணை

**மகான் அமர்நீதி நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.06.2022, வெள்ளிக்கிழமை

1. சக்திமிகு ஞான தேசிகனே
சரவணச் சுடரேற்றி அருளும்
சக்திமிகு ஆறுமுக அரங்கனே
சாற்றிடுவேன் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது மிதுன திங்கள்
குறைவிலா தசதிகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 10 நாள், 24.06.2022 வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு அமர்நீதி நாயனார் யானும்
3. யானும் உலகோர் நலம்பெற உரைப்பேன்
உயர்தருமம் எங்கும் பரவிடவே
ஞானதேசிகன் தரும சாலை
நாடெங்கிலும் கிளைகளாகத் துவக்கி
4. துவக்கியே தருமம் வளர்த்துவர
தொடர்ந்து அரங்கன் தருமம்
அவனியோர் ஆதரவு பெருகி
ஆற்றல்பட வளர்ந்து வர
5. வருகவே மக்களிடை மற்றவர்க்கு
வாரி வழங்கும் வள்ளல் தன்மையும்
தரும சிந்தையும் பெருகி இனிதே
தயவான வாழ்வு முறையாக மாறும்
6. மாறுதல் தரும் மெய்ஞானி அரங்கன்
மாதவ சக்தியாக தரும் தீட்சையை
பேருலகோர் வணங்கி ஏற்றுமே
பிரம்ம வேளை பூசையாகத் தொடர
7. தொடரவே பல சூட்சுமங்கள்
தெளிவுபட ஞானமாகக் கிட்டி
இடரை வெல்லும் சக்திகளும்
எல்லா பலமும் கண்டு உயர்வர்
8. உயர்வை நோக்கி அரங்கஞானி
உயர் தொண்டர்களை படைத்து
தயவை வளர்த்து அருளிவர
தக்கபடி கலியுக மக்களெல்லாம்
9. மக்களெல்லாம் சன்மார்க்கமதை
மரணம் வெல்லும் மார்க்கமாக
ஆக்கமுடன் ஏற்றுத் தொடர்ந்து
அரங்கா முருகா என வேண்டி

10. வேண்டிவர மக்களிடை தேற்றம்
வினவிட குருவருளாக வந்து
தொண்டு வழி செய்யும் தருமம்வழி
தெரிவிப்பேன் யாவரும் சிறந்து

11. சிறந்து அரங்கன் தேடலில்
செப்பிடுவேன் ஞானிகளாவர்
சிறந்த ஆளுமை படைத்து
செப்பிடுவேன் ஞான ஆட்சித்தருவர்
அருளாசி முற்றே

–சுபம்–